ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2455/ 25 - 2025 සැප්තැම්බර් 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.09.25**

2455/25 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டம்**

**92ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர், அநுர கருணாதிலக ஆகிய நான், குறித்த சபைக்கு, கண்டி வடக்கு பாத்ததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின், கொனகலகல புதிய பம்பிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மேலதிக காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் உப அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக் கின்றேன்.

**அநுர கருணாதிலக,**
நகர அபிவிருத்தி,
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

தொடர்பு இல. : MUDH/WS/LA/02/558
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
செத்சிரிபாய கட்டம் 11,
பத்தரமுல்லை,
2025 செத்தெம்பர் 22 திகதி.

1A - G045441 - 08 (2025/09)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**உப அட்டவணை**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 581, கொனகலகல கிராம அலுவலர் பிரிவில், கொனகலகல கிராமத்திலமைந்த, கடத்திரல் வரைபட இலக்கம் 320668 தொகுதி இலக்கம் 01 பத்திரிகை இலக்கம் 01 இன் காணித்துண்டு இலக்கம் 04 இற்கு உரிய "கின்னரபேலகும்புர" எனும் காணியில் கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 0.0030 ஹெக்டயார் (1.2 பர்ச்சஸ்) அளவிலான காணித்துண்டு.

காணியின் எல்லைகள் :

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இந்த கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 2 மற்றும் ஜீ. என். பிரேமவர்தன உரிமை கோரும் கின்னரபேலகும்புர |
| கிழக்கு | : | கால்வாய் (வரண்ட) |
| தெற்கு | : | கால்வாய் (வரண்ட ) |
| மேற்கு | : | இந்த கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 3 மற்றும் 2 |

**காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :**

1. திருமதி நிவந்தி நிர்மாலிகா ஜயவிக்ரம,
இலக்கம் XB 4/24,
எட்மன்டன் வீட்டு தொகுதி,
எட்மன்டன் வீதி,கிருலப்பனை,
கொழும்பு 05.

EOG 09 - 0235

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.